# யாழ். பல்கலைக்கழக மாணவ சகோதரன்

# விஜிதரன் எங்கே?

## யார் இந்த விஜிதரன் ?

தான் பிறந்த மட்டக்களப்பில் தனக்குப் பாதுகாப்பில்லை, யாழ்ப்பாணம் சென்றால் அங்கே நிம்மதியாக வாழ்வேன் என்ற நப்பாசையோடு பல்கலைக்கழகத்தில் படிக்க வந்தவன் விஜிதரன். நான்கு தங்கைகள், வயது வந்த அப்பா, அம்மா எல்லோரையும் வாழ வைக்கவேண்டிய பெரிய பொறுப்பு அவன் தலையில் சுமத்தப்பட்டிருந்தது. அதற்காகப் படித்தான். யாழ். பல்கலைக்கழக வர்த்தக பீடத்தில் 3-ம் வருட மாணவன் அவன்.

தான் மாத்திரம் முன்னேற வேண்டும் என்ற சுயநலம் அவனிடம் இல்லை. மாணவர்களின் உரிமை மறுக்கப்பட்ட இடமெல்லாம் விஜிதரனின் குரல் ஒலிக்கத் தவறுவதேயில்லை. அதனால் தான் 'விஜி' என்ற ஒலிகள் இன்று யாழ்ப்பாணம் முழுவதும் கேட்கின்றது.

4-11-86-ல் திடீரென விஜி காணாமற் போய்விட்டான். சக மாணவர்கள் பொறுத்திருந்து பார்த்தனர். காணவில்லை அண்ணன் விஜி எங்கே? தம்பி விஜி எங்கே? தோழன் விஜி எங்கே? என்ற கூக்குரல்கள் நாலாபுறமும் ஒலிக்கின்றன விஜி ஏன் கடத்தப்பட்டான்? எங்கே மறைத்து வைக்கப்பட்டுள்ளான்? அவன் செய்த குற்றம் என்ன? எல்லாம் மூடுமந்திரமாகவே உள்ளன.

பெற்ற தாய், அன்புத் தந்தை, உடன் பிறந்த தங்கைமார் விடும் கண்ணீருக்கும் மேலாக யாழ் அன்னையர், தங்கையர், மாணவ சகோதரர், பல்கலைக்கழகத் தோழர், ஏன் விரிவுரையாளர்கள் எல்லோருமே விஜி எங்கே? என்று ஓலமிடுகின்றனர். 18-11-86 தொடங்கிப் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கத்தொடங்கி விட்டார்கள். பல்கலைக்கழகத்தின் வாழ்வு கூட இன்று விஜியின் வரவிலேயே தங்கியுள்ளது.

விஜி கடத்தப்பட்டான் என்ற செய்தி கேட்ட தம்பிமார் பாடசாலைக்குப் போக அஞ்சுகிறார்களே! இலங்கை அரசு காணாமற் போனவர்கள் என்று கூறி எம்மினத்தை அழித்தொழிக்கும் நிலை எம்மவரிடையும் உருவாகி விட்டதா? வடபகுதி முழுவதுமே இன்று இயக்கக் கட்டுப்பாட்டில் உள்ளது. அப்படியிருக்க விஜியின் மறைவு ஏன் மர்மமாயுள்ளது.

## பண்பான இயக்கத் தோழர்களே ?

விஜி எங்கே என்ற வினவுக்கு நீங்கள் விடை கூறித்தான் ஆகவேண்டும். ஒரு உயிருக்காக ஈழம் முழுவதும் உருக்குலைந்து போயுள்ளது. இந் நிலை நீடித்தால் வடபகுதியில் பல உயிர்கள் மாளவேண்டி ஏற்படும். கல்வி தடைப்படும்.

## அன்பான இயக்கத் தோழர்களே ?

இலங்கை அரச கூலிப்படைகளின் உயிரைக் கூடப் பலதடவை காப்பாற்றிப் 'பண்பாளர்' என்று பெயரெடுத்த நீங்கள் உங்கள் தம்பி விஜியின் உயிரைக் காப்பாற்றவே முடியாதா? இல்லவே இல்லை! உங்களால் முடியாதது எதுவுமே இல்லை.

**யாசித்துப் பெறுவதில்லை சுதந்திரமும், ஜனநாயகமும்**

**"அராஜகம் ஒழியட்டும், சமநீதி கிடைக்கட்டும்"**

குறிப்பு: 22-11-1986 சனிக்கிழமை அன்று காலை 9-00 மணிக்கு முல்லைத்தீவு மேற்குப் பகுதிப் பாடசாலைகளின் மாணவர் ஒன்றியங்களும், பழைய மாணவர் சங்கங்களும் சேர்ந்து நடாத்தவிருக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் அனைத்து மாணவர்களையும் பெற்றோர்களையும் பங்குகொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

இன்று விஜி நாளை நாமாக இருக்கலாம். எனவே இவ்வாறான அராஜகம் இனியும் தொடராதிருக்கவும், விஜிதரனின் விடுதலைக்காகவும், நாம் அனைவரும் பங்கு கொள்வது தமிழினத்தின் தலையாய கடமையாகும்.

*21-11-86*

முல்லைத்தீவு மேற்குப் பகுதி
உயர்தர மாணவர் ஒன்றியங்
பழைய மாணவர் சங்கங்களும்